| ஆதிதிராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) கீழ்காணும் திட்டங்களைச்செயல்படுத்தி வருகின்றது. |
|---|
| **பொருளாதார மேம்பாட்டுத்திட்டங்கள்.** |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் விவரம் | தகுதி | அணுக வேண்டியவர்கள் |
|---|---|---|---|---|
| 1. அ | **நிலம் வாங்குதல் திட்டம் (மகளிருக்கானது)** | இத்திட்டம் ஆதிதிராவிட மக்களின் நில உடமையினை அதிகரிக்கும் பொருட்டும், ஆதி திராவிட மகளிரின் சமூக அந்தஸ்தை உயர்த்தும் நோக்கத்தோடும் உருவாக்கப் பட்டுள்ளது.<br>• திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ. 2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.<br>• இத்திட்டத்தின் கீழ் வாங்கப் படும் நிலங்களுக்கு முத்திரைத் தாள் மற்றும் பதிவு கட்டணத்தில் முழு விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.<br>• இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front end subsidy) இருக்கும். | • விண்ணப்பதாரர் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த மகளிராக இருக்க வேண்டும்.<br>• 18–65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>• விண்ணப்பதாரர் விவசாயத்தை தொழிலாக கொண்டவராக இருக்க வேண்டும்.<br>• குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்<br>• விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| ஆ. | **நில மேம்பாட்டுத் திட்டம் (இருபாலருக்கும்)** | இத்திட்டம் ஆதிதிராவிட மக்களின் நிலங்களை விவசாயத்திற்கு ஏற்புடையதாக மாற்றுவதற்கு தேவையான நில மேம்பாட்டு ஆதாரங்களை உறுதி செய்வதற்காக உருவாக்கப் பட்டுள்ளது.<br>• திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ. 2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.<br>• இவ்வாறு விடுவிக்கப்படும் | • ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்த ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.<br>• 18–65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>• விண்ணப்பதாரர் விவசாயத்தை தொழிலாக கொண்டவராக இருக்க வேண்டும்.<br>• குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் | மாவட்ட மேலாளர், தாட்கோ |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front end subsidy) இருக்கும்.<br>• நிலம் மேம்பாடு செய்வதற்கு நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டும்.<br>• நிலத்தில் போதிய நீர் ஆதாரம் உள்ளது என்பதற்கான புவியியல் வல்லுநரின் சான்று பெற்றிருக்க வேண்டும். | இருக்க வேண்டும்<br>• விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது. | |
| இ. | **துரித மின் இணைப்பு திட்டம்** | • தகுதியுடைய விண்ணப்பதாரர் ஒருவருக்கு ரூ.75,000/– வைப்புத் தொகையாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடம் நேரடியாக தாட்கோ செலுத்தி ஆதிதிராவிட விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு பெற்றுத் தந்திட முன்னுரிமை அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. | • விண்ணப்பதாரர் விவசாயியாக இருக்க வேண்டும்.<br>• வயது 18–65 குள்ளாக இருக்கவேண்டும்.<br>• விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர், தாட்கோ திட்டங்களின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக்கூடாது. | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| 2.<br><br>அ) | **தொழில் முனைவோர் திட்டம்**<br><br>**பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைத்தல்** | ஆதிதிராவிடர்கள் பெட்ரோல், கேஸ் சில்லரை விற்பனை நிலையம் அமைப்பதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.<br>• திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படும்.<br>• இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front end subsidy) இருக்கும். | • சிறப்புத் திட்டமான பெட்ரோல், டீசல், எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல் திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• சிறப்புத் திட்டமான பெட்ரோல்/டீசல்/ எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைப்பதற்கு நிலம் விண்ணப்பதாரரின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும்.<br>• விண்ணப்பதாரர் எண்ணெய் நிறுவனம் | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| ஆ) | **தொழில் முனைவோர் திட்டம்** | ஆதி திராவிடர்கள் தங்களுக்கு தெரிந்த தொழில் செய்திட, அவர்களை தொழில் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முனைவோராக உயர்த்தும் நோக்கில் பல்வேறு வருவாய் ஈட்டும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.<br>குறைந்தபட்ச திட்டத்தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். | மூலம் தெரிவு செய்யப் பட்டிருக்க வேண்டும்.<br>• தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• மனுதாரர் ஆதிதிராவிட பிரிவினரை சார்ந்தவராகவும், 18-65 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>• விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.<br>• கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். | |
| 3. அ. | **<u>இளைஞர்களுக் கான சுய வேலை வாய்ப்புத் திட்டம். (SEPY)</u>** | படித்த வேலையற்ற ஆதிதிராவிட இளைஞர்கள் தங்களுக்கு தெரிந்த விருப்பமான தொழிலில் ஈடுபடவும் அல்லது தொழிலினை உருவாக்கும் எண்ணத்துடன் கூடிய ஆதிதிராவிட இளைஞர்–களுக்கான திட்டமாகும். | • குடும்ப ஆண்டு வருமானம் 1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) மிகாமல் இருக்க வேண்டும்.<br>• மனுதாரர் ஆதிதிராவிட பிரிவினரை சார்ந்த வராகவும், 18-45 வயதிற்குள்ளாக இருக்க வேண்டும்.<br>• விண்ணப்பதாரர் மற்றும் அவர் குடும்பத்தினர் தாட்கோ திட்டத்தின் கீழ் இதுவரை மானியம் எதுவும் பெற்றிருக்கக் கூடாது.<br>• கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலை பற்றி அறிந்தவராகவோ அனுபவம் உள்ளவராகவோ இருக்க வேண்டும்.<br>• தாட்கோ, மாநில அல்லது மத்திய அரசு அங்கீகரிக்கப்பட்ட | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| ஆ. | **<u>மருத்துவமனை, மருந்துக்கடை, கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலைம் அமைத்தல்</u>** | சிறப்புத் திட்டமான Sepy Clinic திட்டத்தின் மூலம் மருத்துவர் (MBBS, BDS, BSMS) பட்டம் பெற்று இந்தியன் மெடிக்கல் கவுன்சிலிங்ல் பதிவு செய்தவர்கள் சொந்தமாக மருத்துவமனை அமைப்பதற்கும், முடநீக்குமையம், (Physiotheraphy Centre) / மருந்தகம் அமைப்பதற்கு உரிய படிப்பு படித்து உரிய கவுன்சிலில் பதிவு செய்திருக்க வேண்டும். கண்ணாடியகம், இரத்தப் பரிசோதனை நிலையம் அமைப்பதற்கு உரிய பட்ட / பட்டய படிப்பு முடித்திருக்க வேண்டும்.<br>• திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குடும்பத்திற்கும் அதிக பட்சமாக 30% வீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத் தொகை மானியமாக வழங்கப்படும்.<br>• இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front end subsidy) இருக்கும். | தொழில் பயிற்சி நிறுவனங்களில் தகுதி சான்று பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். | |
| 4.<br>அ. | **<u>சுய உதவி குழுக்களுக்கான சுழல் நிதி</u>** | ஆதிதிராவிட பெண்கள், ஆண்கள் மற்றும் திருநங்கைகள் உறுப்பினர்களாக கொண்ட குழுக்களுக்கு வறுமை ஒழிப்பு நோக்கத்தோடு உள்கடன் அளித்திட சுழல்நிதி வழங்கப் படுகிறது. குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்தபட்சம் 5 வரை இருக்க வேண்டும்.<br>சுழல்நிதி ரூ.25,000/– தாட்கோ மானியமாக வழங்கப்படும். | • ஆதிதிராவிட மகளிர் மட்டுமே உள்ள குழுவாக இருக்க வேண்டும்.<br>• சுழல்நிதி பெறுவதற்கு குழு ஆரம்பித்து 6 மாதங்கள் முடித்து முதல்முறையாக தர நிர்ணயம் செய்யப் பட்டிருக்க வேண்டும்.<br>• உறுப்பினர்களுக்கான குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• பொருளாதார கடன் பெறுவதற்கு இரண்டு முறை தரம் பிரித்தல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.<br>• சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் வேறு எந்த அரசு திட்டத்திலும், சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுக்கான மானியம் பெற்றிருக்க கூடாது. | மாவட்ட மேலாளர், தாட்கோ |
| ஆ. | **<u>சுயஉதவி குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி</u>** | ஆதிதிராவிட பெண்கள், ஆண்கள் மற்றும் திருநங்கைகள் ஆகிய சுய உதவிக் குழுக்கள் முறையாக இருமுறை தர நிர்ணயம் செய்யப்பட்ட பின்பு கடன் பெற தகுதி பெறுகின்றார்கள். சுய உதவிக் குழுக்களுக்கு உரிய நேரத்தில் நியாயமான வட்டி விகிதத்தில் தேவைப்படும் அளவிற்கு கடன் வழங்குவதன் மூலம் ஆதிதிராவிட மகளிர் பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்படுகிறது.<br>• திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகப் பட்சமாக 50% அல்லது ரூ. 2.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத் தொகை மானியமாக வழங்கப்படும்.<br>• இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் முன் விடுவிப்பு மானியமாக (Front end subsidy) இருக்கும். | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5. | **<u>மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை திட்டம்</u>** (Off line) | தாட்கோ திட்டங்கள் எதிலும் உடனடியாக பயன்பெற இயலாதவர்களுக்கு விரைவில் சுயதொழில் புரிந்து பயன்பெறும் பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. | • ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும்.<br>• எந்த ஒரு அரசு திட்டத்தின் கீழும் , மாதாந்திர அடிப்படையில் தொடர்ந்து பணப் பயன் பெறாதவர்களாக இருக்க வேண்டும்.<br>• கல்வி தொடர்வதற்கு கூடுதல் நிதிக்கு விண்ணப்பிப்பவர் கல்வி நிறுவனத்திடமிருந்து உண்மைத் தன்மை சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். | மாவட்ட ஆட்சியர் / மாவட்ட மேலாளர், தாட்கோ |
| 6. | **<u>மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை திட்டம்</u>** (Off line) | இத்திட்டத்தில் ஆதிதிராவிட விதவைகள், மாற்றுத்திறனாளிகள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டவர்கள், நலிந்த கலைஞர்கள், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகளுக்கு தேவையான திறன் வளர்க்கும் பயிற்சிகள் மற்றும் கல்வியினைத் தொடருவதற்கு தேவைப்படும் கூடுதல் நிதியுதவி, இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள், போன்றவர்களுக்கு நிதி விடுவிக்கப்படும். | • ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும்.<br>• எந்த ஒரு அரசு திட்டத்தின் கீழும் , மாதாந்திர அடிப்படையில் தொடர்ந்து பணப் பயன் பெறாதவர்களாக இருக்க வேண்டும்.<br>• கல்வி தொடர்வதற்கு கூடுதல் நிதிக்கு விண்ணப்பிப்பவர் கல்வி நிறுவனத்திடமிருந்து உண்மைத் தன்மை சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை. |
| 7. | **<u>தாட்கோ, தலைவரின் விருப்புரிமை நிதி உதவி</u>** (Off line) | இத்திட்டத்தில் ஆதிதிராவிட விதவைகள், மாற்றுத்திறனாளிகள், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டவர்கள், நலிந்த கலைஞர்கள், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகளுக்கு தேவையான திறன் வளர்க்கும் பயிற்சிகள் மற்றும் கல்வியினைத் தொடருவதற்கு தேவைப்படும் | • ஆதிதிராவிடர்களாக இருக்க வேண்டும்.<br>• எந்த ஒரு அரசு திட்டத்தின் கீழும் , மாதாந்திர அடிப்படையில் தொடர்ந்து பணப் பயன் பெறாதவர்களாக இருக்க வேண்டும். | தாட்கோ தலைவர், தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூடுதல் நிதியுதவி, இனக் கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள், போன்றவர்களுக்கு நிதி விடுவிக்கப்படும். | • கல்வி தொடர்வதற்கு கூடுதல் நிதிக்கு விண்ணப்பிப்பவர் கல்வி நிறுவனத்திடமிருந்து உண்மைத் தன்மை சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். | |
| 8. | **<u>இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி</u>** | இந்திய குடிமைப் பணி முதன்மை தேர்வு எழுத விரும்பும் ஆதிதிராவிட இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு முதல் நிலைத் (Preliminary Exam) தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு (Main exam) எழுதுபவர்களுக்கு ரூ. 50,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. | • ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.<br>• இந்தியக் குடிமைப் பணி முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>• இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்<br>• மாநில அரசு மத்திய அரசு பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும்.<br>• ஆண்டு வருமானம் 3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்<br>• இந்நிதியுதவி ஒருவருக்கு அதிகபட்சமாக மூன்று முறை வழங்கப்படும். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை. |
| 9. | **<u>இளம் சட்டப் பட்டதாரி களுக்கு தொழில் துவங்குவதற்கு நிதி உதவி</u>** | இளம் சட்டப்பட்டதாரிகள் தங்கள் தொழிலை துவங்குவதற்கு அலுவலக வாடகை முன்பணம், அறைகலன்களான மேஜை, நாற்காலி, அலமாரி மற்றும் சட்டப்புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ.50,000/- நிதி வழங்கப்படுகிறது. | • வயது 21–45க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>• தமிழ்நாடு பார் கவுன்சிலில் உறுப்பினராக இருக்க வேண்டும். | மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் |
| 10. | **<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி–1 முதல்நிலைத் தேர்வில் வெற்றி</u>** | தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி–1 முதனிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வு எழுதும் ஆதிதிராவிட இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு 2013–14ம் நிதியாண்டு | • தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி–1 முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, தலைமை |

| | | | | |
|---|---|---|---|---|
| | <u>**பெற்றவர்களுக்கு நிதியுதவி**</u> | முதல் அறிமுகப்படுத்தப்பட்டு, ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. | • தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தொகுதி–1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்<br>• மாநில அரசு மத்திய அரசு பொதுத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும். | அலுவலகம், சென்னை. |
| 11. | <u>**பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கருக்கு நிதியுதவி**</u> | பட்டயக் கணக்கர்கள் / செலவுக் கணக்கர்கள் தங்கள் தொழிலைத் துவங்குவதற்கு அலுவலக வாடகை முன்பணம், அறைகலன்கள் மற்றும் துறை சார்ந்த புத்தகங்கள் வாங்குவதற்கு 2013–14ம் நிதியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டு ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. | • வயது 25–45க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>• பட்டயக் கணக்கர் / செலவு கணக்கராக தொழில் செய்வதற்கு இந்திய பட்டயக் கணக்கர் நிறுவனம் / செலவு கணக்கர் நிறுவனத்தில் உறுப்பினராக பதிவு செய்திருக்க வேண்டும். | மேலாண்மை இயக்குநர், தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை |
| 12. | <u>**சமூக நலத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் மகளிர் தையல் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு நிதியுதவி**</u> | • மகளிர் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள ஆதிதிராவிட மகளிர்கள் பயன்பெறும் வகையில் உயர்தர நவீன தையல் இயந்திரம் வாங்கிட திட்டத்தொகையில் 70% தாட்கோ மூலதனத்தில் இருந்து 4% வட்டியில் விளிம்புக் கடனாகவும், மீதமுள்ள 30% தாட்கோ மூலம் மானியமாகவும் வழங்கப்படும். | | மாவட்ட சமூக நல அலுவலர்/ மாவட்ட மேலாளர், தாட்கோ |
| 13. | <u>**திறன் மேம்பாட்டு பயிற்சிகள்**</u> | • சிறப்பு மத்திய நிதியுதவியிலிருந்து இலகுரக மற்றும் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சி அளித்து ஓட்டுநர் உரிமம் பெற்றுத் தரப்படும்.<br>• மைய அரசு நிறுவனங்கள் மூலம் ஆயத்த ஆடை தயாரித்தல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல், காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல், கணினி பயிற்சிகள், தகவல் தொழில் நுட்பம் மற்றும் அவை சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும். | | தாட்கோ, தலைமை அலுவலகம், சென்னை. |

மேலாண்மை இயக்குநர்.

| மாவட்டமேலாளர்அலுவலகங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்ட பெயர் | முகவரி | வெளியூர் எண் | தொலைபேசி எண் | மொபைல் எண் |
| 1 | அரியலூர் | 2வது மாடி, மாவட்டஆட்சியர் அலுவலகம், அரியலூர்—621704. | 4329 | 228315 | 9445029554 |
| 2 | சென்னை | சிங்காரவேலர்மாளிகை,மாவட்டஆட்சியர் அலுவலகம் 33,ராஜாஜி சாலை, சென்னை —600001. | 44 | 25246344 | 9445029456 |
| 3 | கோயம்புத்தூர் | அரசுஆண்கள் விடுதி காம்பவுண்ட், டாக்டர் பாலசுந்தரம் சாலை,கோயம்புத்தூர் — 641018. | 422 | 2210111 | 9445029457 |
| 4 | கடலூர் | புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அறை எண்.313/316, 2வது தளம், ஆல்பேட்டை, கடலூர் 607 001. | 4142 | 221087 | 9445029458 |
| 5 | தருமபுரி | சாலை விநாயகர் கோவில் தெரு, திருப்பாச்சிபுரம்,தருமபுரி — 636701. | 4342 | 260007 | 9445029459 |
| 6 | திண்டுக்கல் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,திண்டுக்கல் — 624004. | 451 | 2460096 | 9445029460 |
| 7 | ஈரோடு | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், 6வது மாடி, ஈரோடு —638011. | 424 | 2259453 | 9445029461 |
| 8 | காஞ்சிபுரம் | நெ.55 ஏ, 3வது தெரு, எல்லப்பா நகர், (கலெக்ட்ரேட் எதிரில்) காஞ்சிபுரம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் – 631501 | 44 | 27237842 | 9445029462 |
| 9 | கரூர் | மாவட்டஆட்சியர்அலுவலகம்,கரூர்—639005. | 4324 | 256703 | 9445029463 |
| 10 | கிருஷ் ணகிரி | மாவட்டஆட்சியர் அலுவலகம், கிருஷ் ணகிரி. | 4343 | 238881 | 9445029464 |
| 11 | மதுரை | டி.ஆர்.டி.ஏ.காம்ப்ளெக்ஸ்,மாவட்டஆட்சியர் அலுவலகம்,மதுரை—625001. | 452 | 2529848 | 9445029465 |
| 12 | நாகப்பட்டினம் | 21,ஏ.எஸ்.பி டவர்,நீ லமேக வடம்போக்கிதெரு,நாகப்பட்டினம் — 611001. | 4365 | 220301 | 9445029466 |
| 13 | நாமக்கல் | அர்த்தநாரிபிள்ளைதெரு,மோகனூர்சாலை, நாமக்கல்—637001. | 4286 | 229070 | 9445029467 |
| 14 | நாகர்கோவில் | #36/1,பிரசிடண்ட் சிவதானு தெரு,எஸ்.எஸ்.பி(தெற்கு),நாகர்கோவில் — 629001.கன்னியாகுமாரி மாவட்டம் | 4652 | 227532 | 9445029468 |
| 15 | ஊட்டி | எட்டிம்சாலை,அலங்கார்தியேட்டர்அருகில், ஊட்டி—643001. | 423 | 2443064 | 9445029469 |
| 16 | பெரம்பலூர் | #29, தபால் நிலைய அலுவலகம் சாலை,வது குறுக்கு சந்து, பெரம்பலூர் — 621212. | 4328 | 276317 | 9445029470 |
| 17 | புதுக்கோட்டை | பஞ்சாயத்து யூனியன் அலுவலகச் சாலை, காட்டுக்குளம், புதுக்கோட்டை — 622001. | 4322 | 221487 | 9445029471 |

| மாவட்டமேலாளர்அலுவலகங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | மாவட்ட பெயர் | முகவரி | வெளியூர் எண் | தொலைபேசி எண் | மொபைல் எண் |
| 18 | இராமநாதபுரம் | மாவட்ட ஆட்சியர் அலுவலக தபால் அலுவலகம், இராமநாதபுரம்— 623501. | 4567 | 231039 | 9445029472 |
| 19 | சேலம் | எருமைப்பாளையம் சாலை, சீ வநாயக்கன்பட்டி, தாசநாயகன்பட்டி(போஸ்ட்) சேலம் — 636201. | 427 | 2280348 | 9445029473 |
| 20 | சிவகங்கை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிவகங்கை —623560. | 4575 | 240501 | 9445029474 |
| 21 | திருவள்ளூர் | 19, 2 வது தெரு, நீ திபதிகள் காலனி, பெரியகுப்பம்,திருவள்ளூர் — 602001. | 44 | 27665539 | 9445029475 |
| 22 | திருவண்ணாமலை | #183, முத்துவிநாயகர் கோவில் சாலை,திருவண்ணாமலை —606602. | 4175 | 253151 | 9445029476 |
| 23 | தஞ்சாவூர் | நாஞ்சிக்கோட்டை சாலை, காதி காம்ளெக்ஸ் அருகில், தஞ்சாவூர்— 613006. | 4362 | 256679 | 9445029477 |
| 24 | திருப்பூர் | மாவட்டஆட்சியர் அலுவலகம், திருப்பூர்— 641604. | 421 | 2218022 | 9445029552 |
| 25 | திருவாரூர் | #26,அரசினர் மாணவர் விடுதி அருகில் நாகை விரிவாக்க சாலை, திருவாரூர் — 610001. | 4366 | 250017 | 9445029478 |
| 26 | திருச்சி | மாவட்ட ஆட்சியர் அலுவலக சாலை, திருச்சி —620001. | 431 | 2463969 | 9445029479 |
| 27 | தேனி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி — 626531. | 4546 | 260995 | 9445029480 |
| 28 | திருநெல்வேலி | எலந்தக்குளம் ரிசர்வ் லைன் சாலை, பாளையங்கோட்டை, திருநெல்வேலி — 627002. | 462 | 2581097 | 9445029481 |
| 29 | தூத்துக்குடி | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வதுமாடி, தூத்துக்குடி — 628101. | 461 | 2341281 | 9445029482 |
| 30 | வேலூர் | அலுவலர் குடியிருப்பு, பழைய மாவட்ட போர்டு அலுவலகம்,— 632001. | 416 | 2210546 | 9445029483 |
| 31 | விருதுநகர் | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் —626003. | 4562 | 252324 | 9445029484 |
| 32 | விழுப்புரம் | மாவட்டஆட்சியர் அலுவலகம்,விழுப்புரம் —605602. | 4146 | 222863 | 9445029485 |